சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

அசல் வழக்கு எண்.4/2022

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் பி.வா.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கனகராஜ் | வயது | 68 |
| த/பெ | பத்திரப்பன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | காரமடை, பாரதியார் நகர் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் உள்ளிட்ட நிறைய தொழில் செய்து வருகிறேன். எனக்கும் நீதிமன்றங்களில் நிறைய வழக்குகள் உள்ளன என்றால் சரி தான்.நான் யார் சொல்லி சாட்சி சொல்ல வந்து உள்ளேன் என்றால் 2 ஆம் பிரதிவாதி இராமசாமி சொல்லி சாட்சி சொல்ல வந்து உள்னேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால் சரி தான். என்னுடைய நிரூபண வாக்கு மூலம் எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் 2 ஆம் பிரதிவாதியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. அவ்வாறு தயார் செய்யப்பட்டதில் இராமசாமி அழைத்து வந்ததால் கையொப்பம் போட்டேன். நிரூபண வாக்குமூலத்தில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டு உள்ளன என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். நான் காரமடையில் குடி வந்து எவ்வளவு நாட்கள் இருக்கும் என்றால் 15 வருடங்கள் இருக்கும். அதற்கு ஆவணங்கள் ஏதாவது இருக்கிறதா என்றால்

இல்லை. 2 ஆம் பிரதிவாதி இராமசாமி எனக்கு எந்த வகையில் பழக்கம் என்றால் உள்ளூர் காரர். எனது வழக்குகளில் யார் எனக்கு வழக்கறிஞர் என்றால் C.K.நடராஜ் மற்றும் சாந்த மூர்த்தி ஆகியோர்கள். திரு. சாந்த மூர்த்தியின் வழக்கறிஞர் அலுவலகத்தில் என்னுடைய வழக்கு சம்பந்தமாக நான் வந்து செல்லும்போது அங்கு 2 ஆம் பிரதிவாதியும் வந்து செல்வார் என்றால் சரி தான். அவ்வாறு நான் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு வந்து போகும் என்னை 2 ஆம் பிரதிவாதி சாட்சியாக போடும் படி கேட்டார் என்றால் உள்ளூர் காரர் என்ற முறையில் கேட்டார். அதனால் கையொப்பம் போட்டேன் என்றால் சரி தான். எந்த புல எண்ணிற்கு, எவ்வளவு விஸ்தீரணத்திற்கு என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். 2 ஆம் பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க கையொப்பம் போட்டு கொடுத்து விட்டு அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா. கெங்காராஜ்.
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.